1979 பிப்ரவரி 23]

இரண்டாவது முறைகேடு, நாகர்கோவிலில் உள்ள தனது மருமகனுக்கு பொருட்கள் அனுப்ப சிறப்பங்காடியின் டி. என். ஓ. 445 எண்ணுள்ள லாரியை உபயோகித்திருக்கிறார். ஒரு கிலோ மீட்டருக்கு 1 ரூபாய் வீதம் கொடுப்பதற்குப் பதில் கிலோ மீட்டருக்கு 60 பைசா வீதம்தான் அதுவும் 7 மாதங்களுக்குப் பிறகு சிறப்பங்காடியில் தொகையினைக் கட்டினார்.

மேற்கூறிய இரண்டு குற்றச்சாட்டுகளுக்காக பதிவாளர் தனது குறிப்பாணையின் மீது 4–5–78 இல் திருவேங்கடம் மீது குற்றச்சாட்டுக்கள் வரைந்து அவை பரிசீலனை செய்யப்பட்டு கூட்டுறவுத் துறையின் வாயிலாக 25–11–78ல் 6 மாத காலத்திற்கு திருவேங்கடம் அவர்களுக்கு இணைப்பதிவாளருக்கு ஊதிய உயர்வினை நிறுத்தி வைத்திருக்கின்றார்கள். அவர் தஞ்சையிலிருந்து வேறு ஒரு இடத்திற்கு மாற்றப்பட்டு இப்போது செயல்பட்டு வருகிறார் என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் மேலான கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

நிலவள வங்கிகளில் உறுப்பினர் பங்குத்தொகை.

*வினா எண். 140—

திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலவள வங்கிகளிலிருந்து கடன் பெறும்போது சிறு விவசாயிகளிடமிருந்து பெறும் ஷேர் காபிடலின் சதவிகிதம் என்ன ?

(ஆ) அதைக் குறைக்க அரசு உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :

(அ) சிறு விவசாயிகள், குறு விவசாயிகள், பொருளாதாரத்தில் பின்தங்கிய விவசாயிகள் ஆகியோரிடமிருந்து கடன் தொகையில் இரண்டு சதவிகிதம் முதல் ஆண்டிலும், அடுத்து வரும் மூன்று ஆண்டுகளில், ஒவ்வொரு ஆண்டும் ஒரு சதவிகிதமும் ஆக நான்கு ஆண்டு காலத்தில் மொத்தம் ஐந்து சதவிகிதம் பங்குத் தொகையாக பெறப்படுகிறது.

(ஆ) இல்லை.

திரு. கோ. இளங்கோவன் : தலைவர் அவர்களே, மிக சிறிய விவசாயிகள் விஷயத்தில் அதனை நீக்குகின்ற உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, நிலவள வங்கிகளிலே தற்போது வசூலிக்கப்படும் பங்குத் தொகை, இந்திய ரிசர்வ் வங்கியின் விதிமுறைகளுக்கு உட்பட்டது, அவர்களுடைய கட்டளை அது. எனவே, அதில் மாற்றம் செய்ய முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. கந்தசாமி : தலைவர் அவர்களே, சிறு விவசாயிகள் தாங்கள் வாங்கிய கடன்களையே கொடுக்க இயலாத நிலையில்— அரசுக்கு அதுபற்றி பலமுறைகளில் தெரிவிக்கப்பட்டு பஞ்சத்தின் காரணமாகவோ, வெள்ளத்தின் காரணமாகவோ அல்லது தவிர்க்க முடியாத காரணத்தாலோ அவைகளைக் கட்ட முடியாத நிலை இருப்பதால் தள்ளி வைக்க வேண்டுமென்று கேட்டு, அவைகள் தள்ளிவைக்கப்பட்டாலும்கூட—பீனல் இன்டரஸ்ட் என்ற முறையிலே அபராத வட்டியை வசூலிக்கிற நிலை இருக்கிறது. கழுதை சாதாரணமாக வைக்கோல் போரை சுமக்க முடியாத போது நனைந்த பிறகு எப்படி சுமக்கமுடியும்? எனவே, சம்பந்தம் இல்லை என்று அவர்கள் பதில் சொல்லி விடாமல் அதை நீக்குவதற்கு அரசுக்கு உததேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவாகளே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மிகுந்த அனுபவப் பட்டவர்கள். இந்த விவசாயிகள் பிரச்சினை பற்றி ஆழமாகப் புரிந்தவர்கள். இன்றைய தினம், நாளையதினம் மறுநாளும் டெல்லி மாநகரத்திலே என். டி. சி. யிலே தண்ணியம் மிக்க இந்த மாமன்றத்தில் நம்முடைய முதல்வர் அவர்கள் விவசாயிகள் சம்பந்தப்பட்ட அனைத்துப் பிரச்சினைகளை முழுமையாகப் பரிசீலனை செய்து அவர்களுக்கு நல்ல முடிவை அறிவிக்க இருக்கிறேன் என்று அவர்களே சொல்லியிருக்கிறார்கள். அதனையொட்டிய பிரச்சினையைத்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. கந்தசாமி அவர்கள் கிளப்பியிருக்கிறார்கள். நிச்சயமாக அரசு அதை அனுதாபத்தோடு பரிசீலனை செய்யும்.

திரு. ஓ. சுப்பிரமணியம் : பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் சொல்லுகின்றபொழுது சிறு விவசாயிகள், குறு விவசாயிகள் என்று சொன்னார்கள். குறு விவசாயிகள் என்பதற்கு விளக்கம் தேவை. அடுத்து, விவசாயிகள் தங்களிடம் பணவசதியில்லாத காரணத்தால்தான் கடன் வாங்கச் செல்கிறார்கள். அவர்களிடம் ஷேர் காப்டல் வாங்குவது எப்படிப் பொருத்தமாக இருக்கும் ? மேலும், எதைக் கேட்டாலும் ரிசர்வ் வங்கி, உலக வங்கி என்றெல்லாம் சொல்லித் தட்டிக் கழிக்கப்படுகிறது. ஸ்டேட் அடானமி என்று சொல்லும் நேரத்தில் இதற்கெல்லாம் தனியாக அடானமி வரக் கூடாதா ? அதற்கு அரசாங்கம் ஏதாவது முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சிறு விவசாயி, குறு விவசாயி' பெரு விவசாயி என்பதற்கு விளக்கம் கேட்டார்கள்.

'' $2\frac{1}{2}$ ஏக்கர் பாசன வசதியுள்ள நிலமோ அல்லது 5 ஏக்கர் பாசன வசதியற்ற நிலமோ உள்ளவர்கள் சிறு விவசாயிகள், இந்த வரையரைக்கு மேல் நிலம் வைத்திருப்பவர்கள் பெரு விவசாயிகள். $1\frac{1}{2}$ ஏக்கர் அல்லது அதற்கு

1979 பிப்ரவரி 23]

குறைவாக உள்ள பாசன வசதி உடைய நிலம் உள்ள விவசாயிகள் அல்லது 3 ஏக்கருக்கு மேற்படாமல் பாசன வசதியற்ற நிலம் உள்ளவர்கள் குறு விவசாயிகள் ஆவார்கள்.''

மற்றொரு விவரத்தைப் பற்றிக் கேட்டார்கள் ரிசர்வ் வங்கியிடம் வற்புறுத்தக்கூடாதா என்று. அரசு வற்புறுத்திக் கொண்டு இருக்கிறது. இன்றைக்கும், நாளையும், மறுநாளும் கூடயிருக்கின்ற என். டி. சி. கூட்டத்தில் பத்திரிகைகளில்கூடப் படித்திருப்பீர்கள்—மகாராஷ்டிரா முதலமைச்சர் அவர்கள் அக்ரிகல்சர் ஸ்டேட்ஸ், அதாவது விவசாயம் சம்பந்தப்பட்ட மாநிலங்கள் அனைத்துமே இந்தப் பிரச்சினைகளில் கவனம் செலுத்தி, வருகின்ற கூட்டத்தில் மிக அழுத்தமாக ஒருமுகமாக எடுத்துச் சொல்ல வேண்டுமென்று முடிவெடுத்து, அந்த முயற்சியில் ஈடுபட்டு இருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவரவர்களே, நில அடமான வங்கியாக இருக்கும் காலத்தில் கடன் கொடுக்கும் பொழுது இருபதாண்டு தவணை என்று இருந்தது, இப்பொழுது நிலவள வங்கியாக மாற்றப்பட்ட பிறகு நீண்ட காலக் கடன் ஏழாண்டுத் தவணைகளாகக் குறைக்கப்பட்டு விட்டது. பல நாடுகளில்—மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அமெரிக்காவிற்குப் போய்விட்டு வந்தார்கள் அங்கெல்லாம் நீண்ட காலக் கடன்களுக்கு 30 ஆண்டுகளுக்கும் அதிகமான தவணைகள் என்று சொல்லப்படுகிறது—இங்கே இந்தக் கடன்களைத் திரும்பச் செலுத்த முடியாமல் போனதற்குக் காரணம் அவர்களுக்கு தவணைகளை ஏழாண்டுகளாக வைத்திருப்பதுதான், எனவே நீண்ட காலக் கடன்களுக்கு இருபது அல்லது அதற்கும் மேல் உள்ள தவணைகள் என்று ஏற்பாடு செய்வதற்கு இந்த அரசு முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களுடைய மேலான யோசனைகளை மனதில் வைத்து நிச்சயமாக இந்த அரசு ஆவன செய்யும்.

சட்டத்துறைகளில் தமிழ் மொழி-பெயர்ப்பு

*வினா எண் 141—திரு. ரா. மார்க்கபந்து: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) C.P.C. Transfer of property Act. Limitation Act, Court Fees Act, போன்ற அன்றாட நடைமுறையில் உள்ள சட்டங்கள் தமிழாக்கம் செய்யப்பட்டுவிட்டனவா ?

(ஆ) இல்லையெனில், காலதாமதத்திற்கான காரணம் யாது ?